செய்தி வெளியீடு எண்: 449 நாள் : 20.08.2013

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் 20.8.2013 அன்று சென்னை சேப்பாக்கம் எழிலகம் வளாகத்தில் நடைபெற்றது.

தமிழக மக்களின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 85 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு 3 லட்சத்து 16 ஆயிரம் மெ.டன் விலையில்லா அரிசியை தமிழக அரசு வழங்கி வருகிறது. விலையில்லா அரிசி உரிய பயனாளிகளை முழுமையாக சென்றடைவதை அனைத்து அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் தட்டுபாடின்றி அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து உரிய காலத்திற்குள் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்படுவதை அனைத்து அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து தரமான அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமே நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட வேண்டும். தரமற்ற பொருட்கள் நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்படக் கூடாது. தரமற்ற பொருட்கள் நியாயவிலைக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டிருப்பின் அவற்றை உடனடியாக கிடங்குகளுக்கு திருப்பி அனுப்பி விட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும். குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுக்குரிய அளவில் தரமான அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் நியாயவிலைக் கடைகளில் அனைத்து அலுவலர்களும் தணிக்கை பணியை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தகுதியுள்ள குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும். குடும்ப அட்டை கோரி பெறப்படும் மனுக்களை 60 நாட்களுக்குள் தீர்வு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

பொது விநியோகத் திட்ட பொருள்களை கள்ளச்சந்தைக்கு கடத்தப்படுவதை தடுக்கும் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்களை ஊக்குவிக்கும் வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் கள்ளச்சந்தைக்கு கடத்தப்படுவதை தடுக்கும் பணியில் துணிச்சலோடு ஈடுபட்ட விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலராக பணியாற்றிய திருமதி சுகி பிரேமலா என்பவருக்கு தமிழகத்தின் உயரிய விருதான கல்பனா சாவ்லா விருதினை வழங்கியமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு உணவுத்துறையின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது, எனவே, பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி கடத்தும் சமூக விரோத சக்திகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உணவு பொருள் வழங்கல் துறை, வருவாய் துறை மற்றும் குடிமை பொருள் குற்றப்புலனாய்வுத் துறையினர் இரவு ரோந்து பணிகளை அதிகரித்து , வாகன சோதனைகளில் ஈடுபட்டு கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

வெளிச்சந்தையில் அரிசியின் விலையை கட்டுப்படுத்த 1 கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை 17.4.2013 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதனால் வெளிச்சந்தையில் அரிசியின் விலை கட்டுக்குள்

வைக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் தேவைக்கேற்ப கூடுதல் அங்காடிகளை திறக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

காய்கறி விலை உயர்வினை கட்டுபடுத்துவதற்காக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை காணொளி காட்சி மூலம் 20.6.2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். பொது மக்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ள இத்திட்டம் சிறப்புடன் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் அலுவலர்கள் அனைவரும் முனைப்புடன் கண்காணித்து வர வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9